# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

# அ.வ.எண். 32/2018

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுப்பிரமணி | மதம் | : |
| த/பெ | : செங்கய்யா | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

**06.08.2024**

**வா.சா.2 திரும்ப அழைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் இல்லை. நான் யார் கூறி சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் அமீர் சாஹிப் அழைத்து வந்துள்ளேன். அமீர் சாஹிப் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் புல எண்.156/1ல் பாதி அமீர் சாஹிப் அனுபவம் செய்து வருகிறார். புல எண்.156/2 ரோட்டுக்கு கிழக்கே உள்ள சொத்தையும் அமீர் சாஹிப் அனுபவித்து வருகிறார். நான் சொன்ன புல எண்.156/1ல் பள்ளி உள்ளதா என்றால் பாதி புல எண்ணில் பள்ளி உள்ளது. புல எண்.156/1ல் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். புல எண்.156/1ல் பஞ்சாயத்து அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். புல எண்.156/1ல் பள்ளி மைதானம் உள்ளது என்றால் சரிதான்.

2. வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தில்தான் பள்ளி, கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், பஞ்சாயத்து அலுவலகம், பள்ளி மைதானம் எல்லாம் உள்ளது என்றால் புல எண்.156/1ல் பாதி அமிர் சாஹிப் அனுபவத்தில் உள்ளது. மீதியில் மேற்கண்ட அலுவலகங்கள், பள்ளி, மைதானம் உள்ளது. புல எண்.156/2 காலியிடமாக அமீர் அனுபவத்தில் உள்ளது. நான் சொல்வது பொய் என்றாலும் வழக்கு சொத்தில்தான் பள்ளி, கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், பஞ்சாயத்து அலுவலகம், பள்ளி மைதானம் அனைத்தும் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு அமீர் சாஹிப் எத்தனை வருடமாக தெரியும் என்றால் 40 வருடமாக தெரியும்.

3. நான் அமீர் சாஹிபிடம் தான் பள்ளி படிப்பு படித்தேன் என்றால் 3ம் வகுப்பு வரை படித்தேன். நான் படித்ததும் தாவா சொத்தில் உள்ள பள்ளியில்தான் படித்தேன் என்றால் சரிதான். அமீர் சாஹிப்பும் தாவா சொத்தில் உள்ள பள்ளியில்தான் ஆசிரியராக வேலை செய்கிறார் என்றால் சரிதான். நான் படிப்பதற்கு முன்பே பள்ளி இருந்தது என்றால் கூரை கட்டிடமாக பள்ளி இருந்தது. அமீர் சாஹிப் அந்த பள்ளிக்கு ஆசிரியராக எப்போது வந்தார் என்றால் 1974 ல் வந்தார். எனக்கு சரியாக ஞாபகமில்லை.

4. நான் படிப்பதற்கு முன்பே அமீர் சாஹிப் ஆசிரியராக வருவதற்கு முன்பே அங்கு பள்ளி இருந்தது என்றால் இருந்தது. தாவா சொத்து சுப்பிரமணி பெயரில் ஆதியில் இருந்தது என்றால் சரிதான். சுப்பிரமணிக்கு முன்பு தாவா சொத்து யார் பெயரில் இருந்தது என்பது தெரியுமா என்றால் தெரியாது. சுப்பிரமணிக்கு முன்பு தாவா சொத்தை அவர் அப்பா அனுபவித்து வந்து அதன்பின்பு சுப்பிரமணிக்கு தாவா சொத்து வந்தது என்றால் அது எனக்கு தெரியாது. நான் 1988 ல் கிரையம் வாங்கப் போனேன் அதற்குள் அமீர் சாஹிப் கிரையம் வாங்கி விட்டார். நான் கிரையம் வாங்க சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. நான் தெரியாது என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இன்றுவரை தாவா சொத்து சுப்பிரமணி பெயரில் உள்ளது என்றால் சரிதான். அமீர் வாங்கியுள்ளார். தாவா சொத்தில் பள்ளி, கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், பஞ்சாயத்து அலுவலகம், பள்ளி மைதானம் உள்ளதால் பள்ளி கல்வி அதிகாரிகளைதான் வழக்கில் சேர்த்திருக்க வேண்டும் என்றாலும் தவறான அதிகாரிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. சரியாகத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார். தவறான பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்வதாக கூறப்பட்டது)

(மறு விசாரணை இல்லை)